Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 17

செவ்வாய்க்கிழமை 13 டிசெம்பர் 2022

கார்த்திகை 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053



## பலாலியில் இறங்கிய இந்திய விமானம்

### மீண்டும் சேவைகள் ஆரம்பம்

பலாலி சர்வதேச விமான நிலையம் நேற்றுமுதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. சென்னையிலிருந்து வந்த விமானம் நேற்று முற்பகல் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

(தொடர்புடைய செய்தி பக்:-2)

## 2,448 கிலோ மஞ்சள் காக்கைதீவில் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 13

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்கைதீவுப் பகுதியில் வைத்து, 2 ஆயிரத்து 448 கிலோ மஞ்சளை மானிப்பாய் பொலிஸார் நேற்று மீட்டனர். »11

## போதை மாத்திரைகள்; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டிப் பகுதியில் மூன்று போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் »11

### சர்வகட்சிக் கூட்டத்தில்

# விட்டுக்கொடுப்புக்கு இம்மியும் இடமில்லை

### இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 13

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல்தீர்வைக் காணும் நோக்குடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அவரின் அழைப்புக்கிணங்க நாளை (இன்று) பேச்சை ஆரம்பிக்கின்றோம். எமது நிலைப்பாட்டில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. நாம் ஏமாறவும் தயாரில்லை - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். »11

## பலாலி விமான நிலையத்துக்கு யாழிலிருந்து பேருந்துச் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 13

பலாலி விமான நிலையம் நேற்றையதினம் மீளச் சேவையை ஆரம்பித்துள்ள நிலையில், பயணிகளின் போக்குவரத்துத் தேவையைக் »11

## கூட்டமைப்பாகவே தேர்தலில் போட்டி

### புளொட் வெளிப்படைப் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரிந்துசென்று தனித்துப் போட்டியிட்டாலும் ஏனைய கட்சிகள் »11

## நிலப்பரப்பற்ற அதிகாரப்பகிர்வு

### மனோ அணியினர் வலியுறுத்துவர்

கொழும்பு, டிசெ. 13

அரசியல்தீர்வு விடயத்தில், நிலப்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட அதிகாரப்பகிர்வை வழங்கவேண்டும் என்று வலியுறுத்துவோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் »11

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் உள்ளிட்ட நான்கு பேர் வாள்களுடன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

வலி.மேற்கு பிரதேசசபையின் உறுப்பினராகவுள்ள, ஈ.பி,.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவர் உட்பட நான்கு பேர் வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் நேற்றுக் கைது செய்யப் »11

## ஹெரோய்னுக்கு அடிமையான இளைஞரொருவர் உயிரிழப்பு!

மன்னார், டிசெ. 13

உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னுக்கு அடிமையான நிலையில், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை »11

## வெற்றிலைக்கேணியில் வெடிபொருள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணம் - வெற்றிலைக்கேணிப் பகுதியில் வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. தடாகம் ஒன்றுக்கு அருகில் வெடி »11

## உள்ளாட்சித் தேர்தலை நடத்துமாறு உத்தரவிடுக

### உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெ. 13

உள்ளூராட்சிசபைத் தேர்தலை உரிய காலப்பகுதிக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கு »11

## இளைஞர்கள் மூவர் ஹெரோய்னுடன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியில் 2 கிராம் 280 மில்லிகிராம் ஹெரோய்னுடன் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்க »11

### தவறிவீழ்ந்த நிலையில் மீட்கப்பட்ட

## ஆறரைப் பவுண் தாலிக்கொடியை உரியவர்களிடம் ஒப்படைத்த நபர்

முல்லைத்தீவு, டிசெ. 13

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் தவறிவீழ்ந்த ஆறரைப் பவுண் தாலிக்கொடியைக் கண்டெடுத்த வெதுப்பக உரிமையாளர் ஒருவர் உரியவர்களிடம் சேர்ப்பித்துள்ளார். அவரின் இந்தச் செயலுக்குப் பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர். கடந்த இரு தினங்களுக்கு முன்னர் குறித்த வெதுப் »11

## கிணற்றுக்குள் இருந்து இரு சடலங்கள் மீட்பு!

உரும்பிராய்

உரும்பிராய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கிணற்றுக்குள் இருந்து முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - சென்னை விமானசேவை நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.13

பலாலி சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. நேற்றுக் காலை சென்னையில் இருந்து வந்த விமானம் பலாலி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.



முற்பகல் 11.45 மணியளவில் தரையிறங்கிய எயார் இண்டியா விமானத்தில் இராஜதந்திரிகள் உட்பட 5 பயணிகளுடன் 14 பேர் பலாலி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பயணிகள் உட்பட விருந்தினர்கள் கலாசார நடனங்களுடன் வரவேற்கப்பட்டனர். அறிமுக நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன. சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணித்த முதலாவது பயணிக்கு நினைவுப்பரிசும் அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி .எ சந்திரசிறி, எலையன்ஸ் எயார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வினித் சுத், எயார் அலையன்ஸ் அதிகாரிகள், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் பிரியந்த பெர்னாண்டோ, வடமாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், திணைக்கள அதிகாரிகள், சுற்றுலா விடுதி உரிமையாளர்கள், சுற்றுலா நிறுவன பிரதிநிதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த விமான சேவை வாரத்துக்கு நான்கு தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பயணியொருவர் 20 கிலோ வரை பொருள்களை விமானத்தில் எடுத்துச்செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பலாலி சர்வதேச விமான நிலையம் இயங்க வைக்கப்பட்டது. அதன்பின்னர் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. (எ-125,27)



## மாட்டிறைச்சி விற்றவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மாட்டிறைச்சி விற்பனை செய்த குற்றச்சாட்டில் 52 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுத் தகவலுக்கமைய தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். 15 கிலோ மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர். (ய-125)

## உடைமையில் கசிப்பு: இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவரைப் பகுதியில் கசிப்புடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரின் சுற்றிவளைப்பின்போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரிடமிருந்து தலா ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்று தெரிவித்த பொலிஸார், கைது செய்யப்பட்ட இருவரும் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ய-27)

## தபால் திணைக்கள ஊழியர்களின் அனைத்து விடுமுறைகளும் இரத்து

கொழும்பு, டிசெ. 13

தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களினதும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. தபால் சேவையைத் தடையின்றி பேணுவதற்காக இவ்வாறு விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.


தபால் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை இணைப்பாளர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளதாவது:-

தபால் சேவையை தனியார் மயப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றமை, தனியார் ஊடாக தபால் விநியோக சேவையை முன்னெடுப்பதற்கு எடுத்துள்ள தீர்மானம் மற்றும் அலுவலர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றமை உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் உள்ள 27 ஆயிரத்துக்கும் அதிகமான தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் - என்றார்.

இந்த நிலையிலேயே ஊழியர்களின் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டு அனைத்து ஊழியர்களும் பணிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரட்ன உத்தரவிட்டார். (எ-14,இ)



## தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, டிசெ. 13

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் நேற்று நள்ளிரவுவரை அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர்.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம், தபால் காரியாலயங்கள் மற்றும் நிர்வாக காரியாலயங்களில் எந்த விதமான கண்காணிப்புமின்றி மேலதிக கொடுப்பனவுக் குறைப்பு, தபால் திணைக்கள உத்தியோகத்தர்களின் இடமாற்றசபையின் மேல்முறையீட்டுசபை நடவடிக்கையிலிருந்து தொழிற்சங்கத்தை நீக்கியமை, தபால் கட்டணம் மறுசீரமைப்பு தொடர்பில் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு ஆளாகி தபால் திணைக்களத்தின் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற பல விடயங்களுக்கு எந்தவித தீர்வும் எட்டப்படாமைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகவே பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா தபால் ஊழியர்களுக்கு ஆதரவை வழங்கும் வகையில் வவுனியா பிரதான தபால் நிலையமும் நேற்று மூடப்பட்டது. இதன் காரணமாக கடிதங்கள், பொதிகள் அனுப்ப வந்த மக்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவு பெறுவதற்கு வந்திருந்த முதியவர்கள் எனப்பலரும் ஏமாற்றங்களுடன் திரும்பிச் சென்றனர். (எ-14,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முனீஸ்வரன் வீதி பாலத்தின் சீரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்.முனீஸ்வரன் வீதியில் சேதமடைந்த பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலத்தினூடாக வெள்ளம் கூடுதலாக வழிந்தோட வசதியாக யாழ்.மாநகராட்சி மன்றத்தால் பாலம் அமைக்கப்பட்டு வருகின்றது. (எ-14,17)

# ராஜபக்சக்கள் வரும்வரை மோசடி என்பதே இல்லை!

## சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.13
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழித்து பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு தேவைக்கு ஏற்ப அதை மீண்டும் உருவாக்குவது ராஜபக்சக்களின் கனவு. அவர்கள் ஆட்சிக்கு வரும்வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் திருடவில்லை. ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து நிலையை அடைய மிக முக்கிய காரணம்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

எதிர்காலத்துக்கான மாற்றம் என்ற தொனிப்பொருளில் குருநாகலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் சுமார் 33 வீதமானவர்களுக்கு தொழில் இல்லை. பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்துள்ளது. முதற்றடவையாக இலங்கை வங்குரோத்து அடைந்து விட்டது என்று சர்வதேசத்துக்கு அறிவித்தது. பயணம் செய்வதற்கு எரிபொருள் இல்லை. உண்பதற்கு உணவில்லை. மின்சாரம் இல்லை. கல்விச் செயற்பாடுகள் பூச்சிய மட்டத்துக்குச் சென்றுவிட்டன.

இந்த நாட்டில் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் முற்றிலும் பிழையானவை. ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து அடையக் காரணமாகும். இலங்கை மின்சாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்டவற்றில் மோசடிகள் இடம்பெற்றன.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் வரை ஆட்சியில் உள்ளவர்கள் அனைவரும் மோசடியில் ஈடுபட்டனர். அன்று நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி செயல்திட்டத்தை நானே ஆரம்பித்தேன். ராஜபக்ச அதில் 15 பில்லியன் ரூபா வரையில் கையாடல் செய்தார். பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற திருட்டு ராஜபக்சவின் மனைவி செய்த மிகப் பெரிய மோசடியாகும்.

இவ்வாறான திருட்டுக்கள் காரணமாக இன்று எந்த நாடும் வங்குரோத்து அடையாத அளவுக்கு இலங்கை வங்குரோத்து அடைந்துள்ளது. எதிர்காலத்தில் நாட்டை மீட்டெடுக்க இளைஞர்களுடைய பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மக்கள் எழுச்சி போராட்டங்கள் அதை நன்கு உணர்த்தியது. கடந்த 74 வருடங்களாக நாட்டு மக்கள் ஆட்சியாளர்களை பதவியில் அமர்த்தினாலும், அவர்கள் மக்களை ஏமாற்றி ஊழல் மற்றும் மோசடி, கொலை, கொள்ளையில் ஈடுபட்டு நாட்டையே முற்றாக இல்லாது செய்துள்ளனர். நாட்டைக் கட்டியெழுப்ப கூடிய பொருத்தமான தலைவர் ஒருவர் இல்லாத் நிலையே இன்று காணப்படுகிறது. நாட்டைக் கட்டியெழுப்ப புதியதொரு அரசியல் கலாசாரம் மற்றும் மாற்றமொன்று தேவைப்படுகிறது. புதியதொரு தலைமைத்துவம் தேவைப்படுகிறது. புதிய திட்டங்கள், கொள்கைகளைக் கொண்ட தலைவர் ஒருவர் தேவைப்படுகிறார். அரசமைப்பில் புதிய மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது - என்றார். (எ-இ)









# ஐ.ம.ச. பொதுக் கூட்டத்தில் மொட்டுக் கட்சி எம்.பிக்கள்



கொழும்பு, டிசெ.13
ஐக்கிய மக்கள் சக்தியின் 2022 ஆம் ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. அதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் டலஸ் அழகப்பெரும, டிலான் பெரேரா ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இவர்கள் மேடையில் முன்வரிசையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் பொன்சேகா, லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் தலதா அத்துகோரள ஆகியோருக்கு அருகில் அமர்ந்திருந்ததைக் காண முடிந்தது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை - மொட்டு கூட்டணி உதயம்!

## உறுதிப்படுத்தினார் மொட்டுக் கட்சிச் செயலர்

கொழும்பு, டிசெ.13

நாட்டின் நலன்கருதி ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஒன்றிணைந்து செயற்படும். நாட்டுக்கு இரு தரப்பு கூட்டணி அவசியமெனில் அதைச் செய்வதற்கும் நாம் தயார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியும், மொட்டுக் கட்சியும் கூட்டணி அமைக்கவுள்ளன என்று வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதான கட்சி என்ற அடிப்படையில், ஐ.தே.க. தலைவரை ஜனாதிபதியாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். இந்த ஒத்துழைப்பால் இரு கட்சிகளுக்கும் இடையில் தற்போது சிறந்த உறவு ஏற்பட்டுள்ளது.

இரு கட்சிகளுக்கும் கொள்கைகள் உள்ளன. அவை பாதிக்காத வகையில் பயணம் தொடரும். நாட்டின் நலனுக்காக தற்போது இணைந்துள்ளோம். எவ்வளவு தூரம் முடியுமோ அந்த அளவுக்குப் பயணம் தொடரும்.

ஐக்கிய தேசியக்கட்சி பழமையான கட்சியாகும். கிராம மட்டத்தில் கட்டமைப்பு உள்ள கட்சியாகும். எனவே, இணைந்து பயணிப்பது எமக்கு பலமாக அமையும்.

நாட்டு நன்மைக்காகவே நாம் கூட்டணி அமைத்துள்ளோம். எமக்கிடையிலான கூட்டணிக்கும் சாத்தியம் இல்லாமல் இல்லை. சாத்தியம் எனில் பின்வாங்கப் போவதும் இல்லை. முதலில் பேச்சுகள் இடம்பெற வேண்டும். நாட்டுக்கு நன்மையெனில் நிச்சயம் கூட்டணி உருவாகும் - என்றார். (எ-44)

# ரணிலின் ஆட்சியைக் கவிழ்க்க தேர்தலே முதலாவது அடித்தளம்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் சூளுரை

யாழ்ப்பாணம், டிசெ. 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முதலாவது அரசியல் அடித்தளம் உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது இடப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு கொழும்பு, பௌரை கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது அணியில் சிறந்த தலைவர் இருக்கிறார். இணைந்து பணியாற்றக்கூடிய உறுப்பினர்கள் உள்ளனர். எமது பயணம் தொடரும். நாட்டு மக்கள் எமது பக்கமே நிற்கின்றனர். அடுத்து நடைபெறும் தேர்தலில் இது தெரியவரும்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கான அறைகூவலை தேர்தல்கள் ஆணைக்குழு விடுக்க வேண்டும். அதற்கான காலம் வந்துவிட்டது. இந்த ஆட்சி நிச்சயம் கவிழ்க்கப்படும். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இதற்கான அடித்தளம் இடப்படும் - என்றார். (எ-14-44)

# நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு இளையோர் பங்களிப்பு அவசியம்

## ரணில் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 13

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

லியோ கழக ஆள்சேர்ப்பு மற்றும் லியோ தின நிகழ்வுகள், கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைக்கும் அப்பால் சென்று இளைஞர்களின் எதிர்காலத்துக்காக நாட்டைத் தயார்ப்படுத்த நான் தீர்மானித்திருக்கிறேன்.

இளைஞர் சந்ததியினருக்கு உதவும் வகையில் அடுத்த 25 ஆண்டுகளுக்குப் பொருந்தும் வகையில், டிஜிற்றல் அபிவிருத்தியுடன் கூடிய எதிர்காலத்துக்கு ஏற்ற தீர்வுகள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கமைய நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வு காணும் முகமாக மேற்பார்வைக் குழுக்களுக்கு இளைஞர்களை நியமிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023ஆம் ஆண்டில் கொண்டாடப்படவுள்ள 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுடன் இணைந்ததாக இளைஞர்களுக்கான தேசிய அடித்தளமொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. நாட்டைக் கட்டியெழுப்ப இளைஞர்கள் அதில் இணைந்துகொள்ள வேண்டும். எனவே உலகளாவிய நெருக்கடியான காலநிலை மாற்றம் தொடர்பான விடயத்தைக் கருத்தில்கொண்டு, அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான நிகழ்ச்சிக்கு இளைஞர்களின் ஒத்துழைப்பு அர்த்தமுள்ள செயற்பாட்டுக்கு வழிவகுக்க வேண்டும் - என்றார். (எ-14-22)

# பொதுத் தேர்தலில் போட்டியிட்டு ராஜபக்சக்களை வெல்லுங்கள்

## நாமல் ராஜபக்ச சவால்

கொழும்பு, டிசெ. 13

ராஜபக்சக்களை பழிவாங்கும் நோக்குடன் நாட்டை அழிக்காமல் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, முடிந்தால் எம்மைத் தோற்கடியுங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

யூரியூப் பக்கம் ஒன்றின் நேர்காணலில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு நாட்டின் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து அரசியலமைப்பின் பிரகாரம், தேர்தலில் நின்று மக்களின் வாக்கு மூலம் ஒரு நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால், போராட்டத்தின் மூலம் நாடு அராஜகம் செய்வதும் விடுதலைப்புலிகள் அமைப்பால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பும் ஒன்றுதான்.

முழு உலகமும் கொரோனாத் தொற்றால் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி அதிலிருந்து மீள முயற்சிக்கும் வேளையில், சிலர் ஆட்சி அதிகாரத்தில் இருந்து எடுக்க முடியாத அராஜகத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதன் பின்னர் மாற்றுவழியை முன்வைக்கத் தவறிய போராட்டக்காரர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆணை இல்லை என கூறுகின்றனர். அன்றிலிருந்து இன்று வரையிலும், எதிர்காலத்திலும் ராஜபக்சக்கள் இந்த நாட்டையும், பொதுமக்களையும் மிகவும் நேசிக்கின்றனர். இதை யாராலும் அல்லது எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது - என்றார். (எ-14-இ)

# அதிகாரிகள் எனக்கூறி வீடொன்றில் கொள்ளை

## பொலிஸ் அலுவலர் உட்பட மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 13

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகள் எனக் கூறி வீடொன்றில் கொள்ளையிட்ட நாடாளுமன்ற பொலிஸ் பிரிவின் பொலிஸ் அலுவலர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் மீதொட்டுமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரான பொலிஸ் அலுவலர் கடந்த 9 ஆம் திகதி இரவு கடமை முடிந்த பின்னர், தனது இரண்டு சகாக்களுடன் வீடொன்றுக்குள் நுழைந்துள்ளார். தாம் பொலிஸ் அதிகாரிகள் எனக்கூறி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதுபோல் செயற்பட்டு வீட்டிலிருந்த ஒருவர் அணிந்திருந்த இரண்டு மோதிரங்கள் உட்பட சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருள்களைக் கொள்ளையிட்டுள்ளனர்.

வீட்டுக்குள் வந்தவர்கள் தொடர்பில் வீட்டில் இருந்தவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து, பொலிஸாருக்கு முறைப்பாடு பதிவு செய்தனர். அத்துடன் வீட்டிலிருந்தவர்கள் சத்தமிட்டதை அடுத்து அயலவர்கள் அங்கு சென்றதால் சந்தேகநபர்கள் தப்பிச் செல்ல முடியாமல் போயுள்ளது. அதற்கிடையே வீட்டுக்கு விரைந்த வெல்லம்பிட்டி பொலிஸார், மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்தனர்.

கொள்ளையிடச் சென்றவர்களில் ஒருவரான பொலிஸ் அலுவலர் கடந்த 13 ஆண்டுகள் பொலிஸ் துறையில் கடமையாற்றி வந்தவர் என வெல்லம்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏனைய இருவரும் பொலிஸ் அலுவலரின் சகாக்கள் ஆவர் எனவும் வெல்லம்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-14)

# 8 விவசாய நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை!

விவசாய அமைச்சுக்குச் சொந்தமான 8 நிறுவனங்கள் தொடர்பில் அடுத்த வருடத்தில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

[illegible] பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மில்கோ நிறுவனமும், கால்நடை அபிவிருத்தி சபையும் ஒரே நிறுவனமாக செயற்படுத்தப்படவுள்ளன. அத்துடன் உர விநியோகத்தை மேற்கொள்ளும் இரண்டு நிறுவனங்களான லங்கா உர நிறுவனம் மற்றும் கொமர்ஸல் உர நிறுவனம் ஆகியன ஒரே நிறுவனத்தின்கீழ் கொண்டுவரப்படவுள்ளன.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாயம் மற்றும் பயிற்சி நிறுவனத்தையும் அநுராதபுரம் அறுவடை தொழில்நுட்ப நிறுவனம் ஆகியனவற்றை ஒரே நிறுவனத்தையும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (ய-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கடினமான தீர்மானமா? பிரபலமான தீர்மானமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதியின் அழைப்பின்பேரில் இன்று மாலை ஏற்பாடாகியிருக்கின்றது சர்வகட்சிக் கூட்டம். சுதந்திரதினத்துக்கு முன்பு தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்த பின்னணியில் இந்தச் சர்வகட்சிக் கூட்டம் ஏற்பாடாகியிருக்கின்றது. ஒரு போட்டி இடம்பெறுவதற்கு முன்னரே அதன் முடிவுகளைத் தெரிந்திருப்பதைப் போன்று இந்தச் சர்வகட்சிக் கூட்டத்தின் முடிவும் கிட்டத்தட்டத் தெரிந்ததுதான்.

அதியுச்ச அதிகாரப்பகிர்வுடன் கூடிய சமஷ்டியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றன. வழமையான வலியுறுத்தலாக இல்லாமல், தமக்கிடையே ஒன்றுபட்டு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்து இந்தச் சமஷ்டிக் கோரிக்கையை அவை ஒரேகுரலாக ஓரணியில் வலுவாக முன்வைத்திருக்கின்றன. அதேநேரம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு சமஷ்டி அல்ல ஒற்றையாட்சிதான் என்பதுதான் சிங்கள – பௌத்த சித்தாந்தத்தை தமது வாக்கு வங்கிகளாகக் கொண்டிருக்கும் தென்னிலங்கைத் தலைவர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. அதிலும், விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர போன்றோர் சமஷ்டி என்பதை முழுப்பலத்துடன் எதிர்க்கின்றனர். ஆக, 'சமஷ்டியே தீர்வு' என்று வலியுறுத்தும் தமிழ்த் தேசியத் தலைமைகளையும், 'சமஷ்டி என்ற கதைக்குக் கொஞ்சமும் இடமில்லை' என்று வலியுறுத்தும் சிங்கள இனவாதத் தலைவர்களையும் ஒரே மேசையில் சந்தித்து, இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடுவதுபோல பாசங்கு செய்கிறார் ஜனாதிபதி ரணில்.

'இலங்கை இன்று எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரச் சிதைவுக்கும் பேரழிவுகளுக்கும் காரணம் பொருத்தமான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுப்பதற்குப் பதிலாக பிரபலமான தீர்மானத்தை எடுத்தமையே' என்ற கருத்தை கடந்த மூன்று மாதங்களில் மூன்று தடவைக்கும் மேல் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ரணில் வெளிப்படுத்தியமை யாவரும் அறிந்ததே. அளவுக்கு அதிகமான சமுத்திக் கொடுப்பனவுகள், மின்கட்டணச் சலுகை, எரிபொருள்களில் வழங்கப்பட்ட சலுகை இவை காலத்துக்குக்காலம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உரியவாறு முகாமை செய்யப்படவில்லை என்பதுதான் 'சரியான தீர்மானத்துக்குப் பதிலாக பிரபலமான தீர்மானம்' என்ற கூற்றின்மூலம் ரணில் வெளிப்படுத்திய கருத்து. அந்தக் கருத்துக்கள் சரியானவையும் நியாயமானவையும்கூட.


ரணிலின் இந்தக் கருத்துத்தான் இன்றைய சர்வகட்சிக் கூட்டத்தில் அவரை 'கண்ணாடிமுன்' நிறுத்தியிருக்கின்றது. தென்னிலங்கை மக்களையும் சிங்களப் பேரினவாதிகளையும் கடைந்தெடுத்த இனவாத அரசியல் தலைவர்களையும் திருப்திப்படுத்தும் வகையிலான (தென்னிலங்கைக்குப்) பிரபலமான தீர்மானத்தை ரணில் வலியுறுத்தப்போகின்றாரா? அல்லது நீடித்த அமைதிக்குத் தேவையான சரியான தீர்மானத்தை அவர் வலியுறுத்தப்போகின்றாரா? என்பது தொடர்பில் தன்னைத்தானே இன்று சுயபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியவராக ரணில் இருக்கின்றார்.

ரணில் தெரிவித்ததன்படி 'சரியான தீர்மானத்துக்குப் பதிலாக பிரபலமான தீர்மானத்தை' எடுத்ததால் அழிந்தது இலங்கையின் பொருளாதாரம் மட்டுமல்ல, இந்த நாட்டின் எதிர்காலமும்தான். இதை உணர்ந்தவராகையால், இன்று சரியான தீர்மானத்தை – தீர்மானத்தை நோக்கிய வழிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியான ரணிலுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றாவிட்டால் ரணிலும் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் கடாசப்படுவது உறுதி.

### நாளொரு நல்வார்த்தை

" எல்லோருமே வெற்றியை விரும்புகின்றனர். ஆனால் ஒரு சிலரே அதற்காக உழைக்கின்றனர்"

- சிசரோ




# நாட்டின் கலாசாரத்தை மாற்ற இடமளிக்கோம்

## கொழும்பு பேராயர் போர்க்கொடி

கொழும்பு, டிசெ.13

வெளிநாடுகளில் படித்தவர்கள் கூறுகின்றனர் என்பதற்காக இரவு வாழ்க்கை, இரவு நேர களியாட்ட விடுதிகள், கெசினோ, கஞ்சா போன்றவற்றை இலங்கையின் கலாசாரத்துக்குள் சேர்க்க இடமளிக்க முடியாது என கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு குரண புனித பேதுரு கல்லூரியில் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

புனிதமான பௌத்த மதத்தால் போஷிக்கப்பட்ட நாட்டின் நாகரீகம் மற்றும் கலாசாரத்தை அழிக்க அவர்களுக்கு இடமளிக்க முடியாது. இப்படியான முட்டாள் வேலைகளுக்கு இடமளிக்க வேண்டாம் என பௌத்த தேரர்கள் உட்பட சமயத் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

சர்வதேச நாணய நிதியம் அல்லது உலக வங்கி கூறுகின்றது என்பதற்காக நாட்டுக்கு பொருந்தாத சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பிச்சை எடுத்து சாப்பிடுவதைப் போன்றது. சில அரசியல்வாதிகள் இலங்கையை விற்றேனும் சாப்பிட்டு, குடித்து வாழலாம் என நினைத்து, வெளிநாட்டு நிறுவனங்களிடம் நாட்டின் பங்குகளை வழங்கிவருகின்றனர். அதிகாரம், பதவியை பாதுகாத்துக்கொள்ள நாட்டை பயன்படுத்த வேண்டாம் என சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் உயர் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை உள்ளவர்கள் ஊழலான முறைகளுக்கு அடிமையாகியுள்ளனர்.

ஒரு புறம் போதைப்பொருளை வைத்திருப்பவர்களுக்குமரணதண்டனைவழங்கப்படும்எனக்கூறி, மறுபுறம் கஞ்சா பயிரிட இடமளிக்கின்றனர். நாட்டைக்கட்டியெழுப்ப வேண்டுமாயின் நாட்டுக்குள் சிந்தனை ரீதியான முழுமையான புரட்சி ஏற்பட வேண்டும் - என்றார். (எ-இ)

# மீள அதிகரித்தது வளிமண்டல மாசு

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் வளி மாசடைவு தொடர்பான காற்றின் தரச்சுட்டெண் நேற்று மீண்டும் அதிகரித்துள்ளது.

நேற்று முற்பகல் 10 மணிவரையான காலப் பகுதியில், கொழும்பில் காற்றின் தரச்சுட்டெண் 134 புள்ளிகளாக அதிகரித்துள்ளது. கம்பஹா மாவட்டத்தில், 161 புள்ளிகளாக அதிகரித்துள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 146 புள்ளிகளாகவும், கண்டியில் 159 புள்ளிகளாகவும் இரத்தினபுரியில் 107 புள்ளிகளாகவும் காற்றின் தரவுச் சுட்டெண் பதிவாகியுள்ளது.

100 முதல் 150 என்ற வளி மாசடைவு தொடர்பான காற்றின் தரச்சுட்டெண் அளவானது, சுவாசப் பிரச்சினை உள்ளவர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

நாளை 14.12.2022 புதன்கிழமை கார்த்திகை 28

சுபநேரம் : 04.51 -06.21

ராகுகாலம் : 12.21 -01.51

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேலுகுமார் கட்சி தாவமாட்டார் நாரதர் கலகம் நன்மையே

## கூட்டணியின் குடும்பப் பிரச்சினையும் தீரும் என்கின்றார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, டிசெ.13

வேலுகுமார் எம்.பி. எங்களில் ஒருவர். கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவை அவர் பெற்றவர். எனவே, மக்கள் ஆணை இல்லாத இந்த அரசுடன் அவர் இணையமாட்டார்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முடிவுக்கு மாறாக (நடுநிலை) வேலுகுமார் செயற்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் தற்போது உள்ள ஐவரும் பஞ்சபாண்டவர்கள் போல் அண்ணன் தம்பிமார். எங்களுக்குள் ஏற்படும் சிற்சில பிரச்சினை அண்ணன், தம்பிமாருக்கிடையில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை போன்றுதான். அதனை நாம் எங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்வோம். அந்த வகையில் இந்தப் பிரச்சினையும் விரைவில் தீரும், இணைந்து பயணிப்போம்.

ஜனநாயகக் கட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகள்தான் அமைப்பைச் சரியாக வழி நடத்த உந்துசக்தியாக அமையும். நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள். இந்த ஆரோக்கியமான சண்டையும் நன்மையில் முடியும் என்றே நம்புகின்றேன். தான் எடுத்த முடிவு சம்பந்தமாக வேலுகுமார் எமக்குத் தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கின்றோம், அவர் அரசு பக்கம் செல்லமாட்டார்.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்காக எமக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அந்தச் சந்திப்பில் நாமும் பங்கேற்போம் - என்றார்.

(எ-22)


### சாரதிகள் தேவை

பார ஊர்தி வாகன அனுமதிப்பத்திரமுடைய, வெளி மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய, மானிப்பாய்-யாழ். நகர் பகுதிக்கும் இடைப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

வயது : 35-55

077 35 33 851, 077 844 8020

### கார் விற்பனைக்கு

CBL-XXXX எனும் இலக்கமுடைய
TOYOTO Vitz,
Colour - White நல்ல நிலையில் உள்ளது.
தனி ஒருவரின் பாவனை.
2018 ஆம் ஆண்டு உற்பத்தி

077 35 33 851


வவுனியா வடக்கு பிரதேச சபை

### 2023.01.01 முதல் 2023.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2023

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2022.12.13 தொடக்கம் 2022.12.23 ஆம் திகதி பி.ப 1.50 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2022.12.23 பிற்பகல் 02.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2022.12.23 பிற்பகல் 02.10 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொடர் இல | சந்தை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் கோழிக்கடை | 2,000.00 | 10,000.00 | 250,000.00 |
| 2 | நைனாமடு கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 50,000.00 |
| 3 | கனகராயன்குளம் மீன்சந்தை | 2,000.00 | 10,000.00 | 350,000.00 |
| 4 | நைனாமடு மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 25,000.00 |
| 5 | நெடுங்கேணி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் | 2,000.00 | 5,000.00 | 250,000.00 |

கேள்வி நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை அறிய 024-2030200 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும்.

திரு. தருமலிங்கம் பார்த்தீபன்
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.

(CR 38736)(3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 12 . 1957



மறைவு 11 . 12 . 2022

### திரு. குணநாயகம் மணிவண்ணன் (மணி)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குணநாயகம் மணிவண்ணன் கடந்த (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணநாயகம் - விஜயராணி தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம் - சர்வேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், கமலேஸ்வரியின் அன்பு கணவரும், தினேஸ் (ஆசிரியர்), சுலக்ஷி, குணேஸ் (துபாலதிபர் ), சுஜானி, சதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருத்திக்கா (ஆசிரியர்), ஜனார்த்தன் (வைத்தியர் - கொழும்பு), சுகண்யா ஆகியோரின் மாமனாரும், வியாஷன், ரிஷிகேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேம்பன் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 22207) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 06 . 1953



மறைவு 12 . 12 . 2022.

### பொன்னையா சண்முகநாதன்

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது மானிப்பாய் வீதி, மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சண்முகநாதன் நேற்று (12.12.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னத்தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லம் தம்பதியரின் மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும், தில்லைநாயகி, சிவலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்புத்துரை, ஈஸ்வரி, செல்வராணி, கமலராணி, புஸ்பராணி, இந்திராணி, தெய்வராணி, முருதாஸ் ஆகியோரின் மைத்துனரும், துசிதா, நயந்தக்குமரன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அனுஷன் (கிராம அலுவலர் - அச்சுவேலி), பிரணவி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாய் வீதி, மருதனார்மடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி
077 8768 652
077 1514 091

(CR 38735) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பிள்ளையார் கதை

செஞ்சடைமேல் நிலாச்சூடும் சிவபெருமான் திருமகனே
தஞ்சமென வந்தனையும் அடியோமை - நஞ்சனைய
எங்கள் துயர்துடைத்து அருள்வோய் ஐங்கரனே
கெஞ்சுகின்றோம் உளமுருகத் தான் -முருகு




கோப்பாய்ச் சந்தியில் புதிய கார்கில்ஸ் வர்த்தக நிலையமொன்று கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. (எ-14,17,27)

## துப்பாக்கி ரவையுடன் மாணவன் கைது!

கொழும்பு, டிசெ. 13
துப்பாக்கி ரவைகளுடன் பாடசாலை மாணவன் ஒருவன் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கரந்தெனிய பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றின் மாணவனே ரி-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 15 ரவைகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மாணவனின் வீட்டை சோதனையிட்டபோதே துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டன.
இதன்போது கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றத்தில் அவரது தந்தையும் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிகப்படியான செலவும் அலைச்சலும் ஏற்படும்.

**மிதுனம்:** தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். அரசாங்க வகையில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கடகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். தாயாருடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும். அவர் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**துலாம்:** முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமான வரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடவும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் ஒருவழியாக அனுகூலமாக முடிந்துவிடும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில்வாடிக்கையாளர்களுடன் வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் கனிவாக நடந்துகொள்வது அவசியம்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்குவாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். உறவினர்கள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மீனம்:** சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகிமுடியும். ஆனால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. தந்தையாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

# 27ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கி சென்னைக் கிளை குருதிக்கொடை






இலங்கை வங்கியின் 83ஆவது ஆண்டு நிறைவு, சென்னைக் கிளையின் 27ஆவது ஆண்டு நிறைவு என்பவற்றைக் கொண்டாடும் வகையில் இலங்கை வங்கி சென்னைக் கிளையானது அதன் கிளை வளாகத்தில் 'குருதிக் கொடை' நிகழ்வு ஒன்றை அண்மையில் ஏற்பாடு செய்தது.
இலங்கை வங்கியின் சென்னைக் கிளையின் முகாமையாளர் குமுதினி ஜே.யோகரத்தினம் அவர்களின் அழைப்பின் பேரில் நிகழ்வில் கலந்து கொண்ட சென்னையிலுள்ள மகாபோதி மையத்தின் தலைவர் வண. நுககொல்லே சந்தரதன தேரரின் ஆசியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் சென்னையிலுள்ள இலங்கை பிரதித் தூதுவர் மருத்துவர் டி. வெங்கடேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.
இத்தனை ஆண்டுகளாக இலங்கை வங்கி சென்னைக் கிளையின் வெற்றிகரமான பயணத்தில் பங்காளர்களாக விளங்கும் இந்தியா ஆசியான் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் அதிகாரிகள், தென்னிந்தியாவில் உள்ள இலங்கை நட்புறவு சங்க அதிகாரிகள், சென்னை லயன்ஸ் கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இலங்கையைத் தளமாகக் கொண்டு இந்தியாவில் செயற்படும் நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் இலங்கை வங்கி சென்னைக் கிளையின் பணியாளர்கள் உட்பட பலர் இந்தநிகழ்வில் கலந்துகொண்டனர்.
இலங்கை வங்கி சென்னைக் கிளை 27 ஆண்டுகளாக சென்னை மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த வங்கி அனுபவத்தை ஒரே கூரையின் கீழ் வழங்கியதன் பயனாக தற்போது அது பெரு வணிக நிறுவனங்களுள் ஒன்றாக உயர்ந்துள்ளது.
இலங்கை வங்கி சென்னைக் கிளையானது இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளினதும் பொருளாதாரத்தை மேம்படுத்தி இந்திய இலங்கை வர்த்தக உறவுகளை இணைக்கும் அதன் நோக்கத்தை அடைவதற்கான தனது முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.
பெரும்பாலான இலங்கை வணிக வங்கிகளுக்கு முக்கியமான Asian Clearing Union (ACU) பங்காளராக விளங்கும் இலங்கை வங்கி சென்னைக் கிளை, பல தசாப்தங்களாக இந்திய இலங்கை வர்த்தகத் தொடர்பின் முக்கிய பங்காளராக இருந்து வருகிறது.
இலங்கை வங்கி சென்னைக் கிளை, இலங்கையைத் தளமாகக் கொண்ட அனைத்து வணிக வங்கிகளுக்கும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய ரூபா (INR) Vostro கணக்குகளை வழங்குவதன் மூலம் இந்திய இலங்கை இருதரப்பு வர்த்தகத் தொடர்புகளை அடுத்த கட்டத்துக்கு விரிவுபடுத்துவதற்கு முழுவீச்சில் செயற்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 . 02 . 1947

மறைவு
01 . 12 . 2019



## அமரர் செல்லையா சின்னத்துரை

(திதி : 13.12.2022)

ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டது
ஆறாத்துயரை நாங்கள் அனுபவிக்க
மீளாத்துயில் கொண்டீர்கள் அப்பா!
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம்

பாரதி வீதி,
சங்கானை

குடும்பத்தினர்
சி.ஞானேஸ்வரன்

(CS 47988) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 13.11.2022
ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் திருமதி வேலு நாகேஸ்வரி

(கைதடி மேற்கு)

பிறப்பு 13.02.1951
இறப்பு 13.11.2022

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
உதயநகர்.

குடும்பத்தினர்.

(CS 48037) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 02 - 1975

மறைவு
12 - 12 - 2022



## திருமதி மேரி ஜெஸ்லின் தோமஸ்ராஜன் (றெஜி)

செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும் கனால் வீதி, மாதகலை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மேரி ஜெஸ்லின் தோமஸ்ராஜன் (றெஜி) நேற்று (12.12.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யாக்கோப் - காலஞ்சென்ற ஆரோக்கியமலர் தம்பதிகளின் அன்பு மகளும், மரியதாஸ் - காலஞ்சென்ற பிலோமினா தம்பதிகளின் மருமகளும், தோமஸ் ராஜனின் அன்பு மனைவியும், றெஸ்ரினுடைய அன்புத் தாயாரும், பெலஸ்ரின், பூபதி, றதி, நிதி, ஜமறிங்ரன், றவின், மாலினி, விற்றா, றசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லமணியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனால் வீதி, மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு :
தோமஸ்ராஜன் (கணவர்)
077 797 2820

தகவல்
குடும்பத்தினர்

(CS 22203) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
18 - 12 - 1935

இறப்பு
09 - 12 - 2022



## சண்முகசுந்தரம் புவனேஸ்வரி

யாழ். தையிட்டியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை, கனடா-Scarborough ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சண்முகசுந்தரம் புவனேஸ்வரி அவர்கள் 09.12.2022 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் இளைய புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராசா- சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம் (தபால் திணைக்களம் கொழும்பு), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைராசா, கனகாம்பிகை, இராஜரத்தினம், சோதிலிங்கம், தெய்வநாயகி, இராசநாயகி மற்றும் குணசேகரம் (இலங்கை), ஜெயமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், சிவபாக்கியம், மங்களேஸ்வரி,. கணேசலிங்கம், கனகசபை, பரமன், இலங்கைநாயகி மற்றும் ஜீவமலர் (இலங்கை), பரமேஸ்வரன் (லண்டன்), தெய்வநாயகி (இலங்கை), சிவகுமாரி (கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற மஹாகணபதி, பத்மினி, சிதம்பரநாதன், தேவிகா, உமா, காலஞ்சென்ற ஸ்ரீஹரன், பவானி, மீனா, அம்பிகா, ஈஸ்வரப்பிரியா, கணநாதன், கிரீஷன், கீர்வாணி ஆகியோரின், ஆசையம்மாவும், மதிவாணன், பூங்கோதை, கண்ணன், மணிவண்ணன், காயத்திரி, கலைவாணி, இளங் கோவன், முகுந்தன், அமுதன், ரமணன், லோஜினி, கோபிகா, சிவரூபன், சுதாகரன், ஸ்ரீபிரணவி, பாலஹரன், ஸ்ரீபிரசாந்தி, ஸ்ரீபிரதீபா ஆகியோரின் சிறிய தாயாரும், கோமதி, ஜனபாலராஜன், இளமாலதி, ஜெயகலாவாணி, காலஞ்சென்ற ஜெயசீலன், முருகானந்தன், ஜெயராணி, வித்தியா, மைத்ரேயி, அரவிந்தன், சிந்துஜா, குமுதா, சிவானந்தன், சுபோதினி, பிரதீபன், டக்ஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜா, கஜன், அனுஜா, ஆரணி, ஆர்த்திகா, அமோகன், ஷாலினி, பிரகாஷ், சுமுகன், திரிசூலன், ஆதித்யா, இனியா, ஆதர்ஷியா, இராதினி, நிவேதா, ரொஷான்,ஜெஷான், ஹேஷவி, ஹாருணி, ஆதேஷ், நித்தேஷ், அபிநாத், அபிசயன், அபிசரன், அகின், லித்விகா, அக்ஷயன், அஷ்விகா, அஷ்விக், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2022 புதன்கிழமை கனடாவில் நடை பெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
க.கிரீஷன் (பேறாமகன்) : 077 226 7053


(CS 22205) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனசக்தி லை.ஃ.ப் அதீத திறமையினை வெளிப்படுத்தியவர்களை கௌரவித்தது

JANASHAKTHI Life

ANNUAL AWARDS 2022





எஸ். தர்ஷினி
தலைவர் விருது பெற்றவர்

**ஜனசக்தி லைஃப் தமது வருடாந்த விருதுகள் விழா 2022 இல் அதீத திறமைகளை வெளிப்படுத்தியவர்களை விருது வழங்கி கௌரவித்தது.**

இவ்விருதுகள் விழாவானது 2022 ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி மொனார்ச் இம்பீரியல் இல் இடம்பெற்றதுடன், தமது அதிசிறந்த விற்பனர்களை கௌரவிக்கும் நாமமான சிங்க அணியினர் விழா எனும் தொனிப்பொருளில் இவ்விருது வழங்கல் விழா இடம்பெற்றது. ஜனசக்தி லை.ஃ.ப் நாடளாவிய ரீதியல் அமைந்துள்ள கிளைகளின் விற்பனை ஆலோசகர்கள், பிரிவு முகாமையாளர்கள், தொடர்பாடல் அதிகாரிகள், குழுத் தலைவர்கள், பிராந்திய முகாமையாளர்கள், மற்றும் வலய முகாமையாளர்கள் உட்பட அதிசிறந்த 127க்கும் அதிகமானவர்களது திறன் வெளிப்பாடு இங்கு கௌரவிக்கப்பட்டது.

விருது வென்றவர்களுக்கு பணப் பரிசில்களுடன், பொற் காசுகள், மற்றும் வெளிநாட்டு சவாரிகள் அடங்கிய தன்னிகரற்ற பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஜனசக்தி குழும நிறுவனத்தின் நிறுவர் மற்றும் தலைவர் சீ. டீ. ஏ. ஷாப்டர், ஜனசக்தி இன்ஷுவரன்ஸ் பீஎல்சீ நிறுவனத்தின் பிரதித் தலைவர் பிரகாஷ் ஷாப்டர், ஜனசக்தி இன்ஷுவரன்ஸ் பீஎல்சீ நிறுவனத்தின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி லியனகே, மற்றும் ஜனசக்தி குழும நிறுவனத்தின் முகாமைத்துப் பணிப்பாளர் / குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஷாப்டர் உட்பட இன்னும் பலர் அதிதிகளாக இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

ஜனசக்தி லை.ஃ.ப் பயணத்தின் புதிய அத்தியாயமாக உருவெடுக்கும் சிங்க அணியினரின் அதிசிறந்த தேர்ச்சி மட்டம் மற்றும் செயற்திறன் பற்றிய மதிப்பீடுகள் பலவற்றுடன் ஜனசக்தி லை.ஃ.ப் வருடாந்த விருதுகள் விழா 2022 இனிதே நிறைவுற்றது.



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை எந்தநேரமும் சந்திப்பதற்குத் தயாராம்

## மஹிந்த கூறுகின்றார்



கொழும்பு, டிசெ.13
தேர்தலுக்கு இன்னும் 2 வருடங்கள் உள்ள நிலையில் அதுவரை பொறுமை காக்க வேண்டும் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல் ஒன்று வந்தால் அதற்கு அனைத்து சந்தர்ப்பத்திலும் தயாராகவே உள்ளோம். இந்த முறை வரவு- செலவுத் திட்டம் மிகவும் சிறப்பான ஒன்றாகும். தேர்தலுக்கு இன்னும் 2 வருடங்கள் உள்ளன. அதனால் மக்கள் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (எ-இ)

# மரண அறிவித்தல்

## திருமதி விமலநாயகி சந்திரலிங்கம்

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விமலநாயகி சந்திரலிங்கம் அவர்கள் கடந்த (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னபூரணம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான கமலம், திருநாவுக்கரசு கோமளம் மற்றும் தனபாலசிங்கம், நாகேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரியும், சந்திரகாந்தி, சந்திரநிவாசன், சந்திரமாதேவி, சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், சத்தியசீலன், சாந்தீபன், சுரேந்திரன், மயூரன், குருபரன் ஆகியோரின் அன்பு ஆசை மாமியும், தர்சினி, யோகினி, கஜந்தினி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"கண்ணி தோட்டம்"**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 626 4495**

# டயானாவுக்கு எதிரான மனு விசாரணை

*கொழும்பு, டிசெ.13*
இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி எடுத்துக் கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அதை அவசர வழக்காகக் கருதி விரைவான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமென்ற கோரிக்கையும் சட்டத்தரணிகளால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 . 09 . 1948 | 11 . 12 . 2022 |



## திரு.கனகசுந்தரம் அருட்செல்வம்

**(ஓய்வுபெற்ற சென்ஜோன்ஸ் கல்லூரி அலுவலக உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் அருட்செல்வம் அவர்கள் கடந்த (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் கனகம்மா தம்பதியினரின் மூத்தமகனும், காலஞ்சென்ற வெற்றிவேலு மற்றும் பாக்கியரத்தினத்தின் மூத்தமருமகனும், காலஞ்சென்ற இரத்தினவதனா (ஓய்வுபெற்ற ஆசிரியை, சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வேந்திரன் மற்றும் தவராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரத்தினமாலா, காலஞ்சென்ற இரத்தினராசா (பொறியியலாளர்), இரத்தினவேல் (யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) இரத்தினசிங்கம் (காணாமல் ஆக்கப்பட்டவர்), இவ்லீன் இரத்தினலீலா (முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி-கனடா), சோதிலாமணி, குலா ஆகியோரின் மைத்துனரும், கருணாமூர்த்தி, பிரபதாரணி, சுபாங்கினி, ராஜ்குமார் ஆகியோரின் சகலனும், அலன் நிம்ரோ, மேரி காஞ்சனா, ஜெயரூபினி (பிரான்ஸ்), ஜெயனி (லண்டன்), காலஞ்சென்ற சஜதன் மற்றும் சர்மிலன் ஆகியோரின் பெரியப்பாவும், சுஜந்தன், மாதுரி, தெபோரா (கனடா), டானியல், ரூத், டினோஜன், இவான்சலின் ஆகியோரின் மூத்தமாமாவும், ஜெசிக்கா, ஜெனிற்றா ஆகியோரின் அன்பு பெரியதாத்தாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (12.12.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நேரியதூது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"இரத்தினவாசம்" மட்டுவில் தெற்கு.**
**0212271194**
**0774257960**
**0016477649754 (லீலா - கனடா)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 73901/6)

# 19 வயது மகள் துஷ்பிரயோகம் தந்தை கைது!

கொழும்பு, டிசெ.13
உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த தனது 19 வயது மகளை கடுமையாகத் தாக்கி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் 40 வயதுடைய தந்தை ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவி தனது தாய், தந்தை மற்றும் இரண்டு சகோதரர்களுடன் வசிக்கின்றார் என்றும், சுகவீனமுற்றிருந்த சகோதரர்கள் இருவருக்குமான மருத்துவ சிகிச்சைக்காக தாய் வீட்டைவிட்டுச் சென்றிருந்த சமயமே, வீட்டில் இருந்த தந்தை இவ்வாறு நடந்து கொண்டார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கு தலைவலி ஏற்பட்டுள்ளது என்று, தலைக்கு எண்ணெய் தடவுமாறு தந்தை அவரது அறைக்கு அழைத்து தன்னை முகத்தில் முத்தமிட்டார் என்றும், அதை விரும்பாத தான் தப்பிக்க முயற்சித்தபோது தன்மீது தாக்குதல் நடத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனவும் மாணவி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அமைச்சர்கள் நியமனம் இன்னும் தாமதமாகும்!

கொழும்பு, டிசெ.13
அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் புதிதாக நியமிக்கப்படுவது தாமதமாகும் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ள 290 கோடி அமெரிக்க டொலர் கடனுதவி, நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்த பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாணய நிதியத்தின் இந்த ஒப்புதல் கிடைத்த பின்னர், புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என கூறப்படுகிறது.

அமைச்சரவைக்கு நியமிக்க வேண்டிய புதிய அமைச்சர்கள் 12 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி இருந்தது. ஆயினும் அமைச்சர்கள் நியமிக்கப்படுவது தொடர்ந்தும் தாமதமாகி வந்தது.

இந்தநிலையில் வரவு - செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

அமைச்சரவையில் தற்போது 18 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். அரசமைப்புச் சட்டத்துக்கு அமைய மேலும் 12 அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அதனால் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குப் பின்னர் 12 புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய தேசியக்கட்சியின் வஜிர அபேவர்த்தன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் ஜீவன் தொண்டமான், தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவரும் அமைச்சர்களாக பதவியேற்பார்கள் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இவர்களைத் தவிர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மீதமுள்ள அமைச்சுப் பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டபம் முகாமிலிருந்து தப்பிவந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

இந்தியா, தமிழகத்திலுள்ள மண்டபம் முகாமில் இருந்து தப்பிவந்த இலங்கையைச் சேர்ந்த இருவர் வேலணைக் கடற்கரையில் வைத்து கடற்படையால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

குறித்த நபர்கள் இருவரும் இலங்கையிலிருந்து சென்று இந்தியா மண்டபம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றுக் காலை இருவரும் அங்கிருந்து தப்பித்து கடல் மார்க்கமாக மீண்டும் இலங்கைக்கு வந்தனர். இதன்போதே இலங்கைக் கடற்படையால் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

# போதையால் ஏற்பட்ட கொலை மூவர் கைது: ஒருவர் மறைவு!

## மன்னாரில் துயரம்

மன்னார், டிசெ. 13

தொழில் நிமித்தம் மன்னார், பேசாலையில் குடியிருந்தவர்கள் ஒன்றுகூடி மது அருந்திய வேளையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். இது தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி வியாழக்கிமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகின்றது.

கொலை செய்யப்பட்டவர் கொழும்பைச் சேர்ந்த சுப்பையா ஆறுமுகம் சங்கர் (வயது -40) எனத் தெரியவந்துள்ளது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பின் உடல் உறவினர்களிடம் கடந்த சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-23)

### விட்டுக்கொடுப்புக்கு...

ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெறும் சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதி தெரிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் நாங்கள் பேச்சை முன்னெடுப்பதாக இருந்தால் அவரின் வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். அந்தப் புதிய அரசமைப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல்தீர்வு காணப்படவேண்டும். இந்த நோக்கத்துடன் தான் ஜனாதிபதியுடன் பேச்சை ஆரம்பிக்கின்றோம். எங்களுடைய முழுக் கவனமும் தமிழர் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பானதே. இந்த நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைகின்றபோதிலும் தமிழ் மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுக்காக எம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கி வருகின்றோம். ஆனால், தமிழர்களுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. அந்தத் தீர்வைக் காணும் நோக்குடன்தான் ஜனாதிபதியுடன் பேச்சை ஆரம்பிக்கின்றோம். எமது நிலைப்பாட்டில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. நாங்கள் ஏமாறவும் தயாரில்லை' - என்றார். (அ-ம-22)

### ஹெரோய்னுக்கு...

பயனின்றி நேற்று உயிரிழந்தார் என்று மன்னார் மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இருதய வால்வில் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக குறித்த இளைஞர் உயிரிழந்தார். அவர் ஊசி மூலம் போதைப் பொருளை ஏற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்திருக்கலாம் என்றும் மருத்துவமனை வட்டாரங்களும் தெரிவித்துள்ளன. (அ-ம-125)

### 2,448 கிலோ...

அனுமதிப்பத்திரம் இன்றி பெருந்தொகை மஞ்சள் கடத்தப்படுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்த மஞ்சள் பொதிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடத்தலுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-125)

### போதை...

தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 21 வயதுடையவர். அவருக்குப் போதை மாத்திரைகள் எவ்வாறு கிடைத்தன என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஊர்காவற்றுறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-23)

### கிணற்றுக்குள்...

மீட்கப்பட்டுள்ளார். 65 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். குறித்த முதியவரைக் காணவில்லை என்று அவருடைய பிள்ளைகள் தேடியபோதே வீட்டிலிருந்து 100 மீற்றர் தொலைவிலிருந்த தோட்டக்கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மதுபோதையில் நிலைதடுமாறி அவர் கிணற்றுக்குள் விழுந்திருக்கலாம் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்ததுடன் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**மானிப்பாய்**

இதேவேளை - மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடைப் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து நேற்றுக் காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஆனந்தராஜா (வயது-43) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-23-27)

### இளைஞர்கள்...

மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-125)

### ஈ.பி.டி.பி....

பட்டுள்ளனர் என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த சந்தேகநபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மீட்கப்பட்ட ஆயுதங்களுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-27-125)

### உள்ளாட்சித்...

மாறு தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறுகோரி உயர்நீதிமன்றத்தில் நேற்று இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இணைந்து முதலாவது மனுவையும், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், தயாசிறி ஜயசேகர, லக்ஸ்மன் கிரியெல்ல, அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் இணைந்து இரண்டாவது மனுவையும் தாக்கல் செய்தனர். தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள், பிரதமர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (ம-44)

### பலாலி...

கருத்திற்கொண்டு வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையால் பலாலி விமான நிலையத்துக்கும் யாழ். நகருக்கும் இடையிலான பேருந்துப் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் மு.ப. 10.50 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் விமானங்கள், அதே தினங்களில் மு.ப. 11.50 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும்.

இந்த விமான சேவையின் பயணிகளுக்காக யாழ். நகரின் புதிய தனியார் பேருந்து நிலையத்திலிருந்து குறித்த தினங்களில் காலை 8 மணிக்கு பலாலி விமான நிலையத்துக்கும் அவ்வாறே விமான நிலையத்திலிருந்து நண்பகல் 12 மணிக்கு யாழ். நகர் நோக்கியும் பேருந்துச் சேவை மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது. (அ-ம)

### கூட்டமைப்பாகவே...

கூட்டமைப்பாகவே போட்டியிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது தேர்தலில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலனை செய்யப்படும் என்று சுமந்திரன் தெரிவித்திருந்தார். இதையடுத்து நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் பா. கஜதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் பேசப்பட்ட விடயம் பற்றிய செய்திகளைப் பார்த்து அறிந்தேன். ஒவ்வொரு கட்சிக்கும் எப்படித் தேர்தலை எதிர்கொள்வது என்பது பற்றி முடிவெடுக்கும் சுதந்திரம் உள்ளது. அது தமிழரசுக் கட்சிக்கும் உள்ளது. என்றாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் யாரும் அந்த யோசனையை இதுவரை எம்மிடம் தெரிவிக்கவில்லை. இது தொடர்பில் கலந்துரையாடவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் பலப்படுத்தி, தமிழ் மக்களை ஓரணிப்படுத்தவே நாம் தொடர்ந்து முயன்று வருகிறோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை மக்கள் வலியுறுத்தி வருகிறார்கள். என்றாலும், தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதென்று முடிவெடுத்தால், கூட்டமைப்பு குலைந்துவிடும் என்று மக்கள் அச்சப்படத்தேவையில்லை. ஏனைய பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்பாகவே தேர்தலை எதிர்கொள்ளும் - என்றார். (அ-ம-27-159)

### ஆறரைப்...

பகத்துக்கு வந்த தம்பதியர் தாலிக்கொடியை அங்கு தவறவிட்டுச் சென்றுள்ளனர். அந்தத் தாலிக்கொடியை மீட்டு அது தொடர்பில் புதுக்குடியிருப்பு வணிகர்சங்கத் தலைவருக்கு குறித்த வெதுப்பக உரிமையாளர் தெரியப்படுத்தியுள்ளார். தாலிக்கொடியைத் தொலைத்தவர்கள் குறித்த வெதுப்பகத்துக்கு வந்து தமது நிலைமையைத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து உரியவர்கள் உறுதிப்படுத்தப்பட்டு தாலிக்கொடி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ம-19)

### நிலப்பரப்பற்ற...

தெரிவித்தனர்.

இன்று இடம்பெறும் சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பில் நீண்டகாலமாக தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தந்தை செல்வா காலம் முதல் இது தொடர் கதையாகவே உள்ளது. அவ்வாறில்லாமல் குறுகிய கால அவகாசத்துக்குள் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வை வழங்க வேண்டும் என்பதையும் மலையக மக்களுக்காக நிலப்பரப்பற்ற அதிகாரப்பகிர்வையும் நாம் வலியுறுத்துவோம் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-ம-44)

### வெற்றிலைக்கேணியில்...

பொருள்கள் இருப்பதை அவதானித்த மீனவர் ஒருவர், இது தொடர்பில் வெற்றிலைக்கேணி இராணுவ அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த இராணுவத்தினர் அங்கிருந்து 60 எம்.எம். ரக - 10 மோட்டார்குண்டுகளை மீட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள்களுக்கு எதிராக தீவகத்தில் விழிப்புணர்வுப் பேரணி!




யாழ்ப்பாணம், டிசெ. 13

உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு எதிராக தீவக மறைக்கோட்டத்தில் விழிப்புணர்வுப் பேரணியொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இரண்டு பிரிவாக தீவக மறைக்கோட்டத்துக்கு உட்பட்ட மண்டைதீவு, சாட்டி, நாரந்தனை, கரம்பொன், புங்குடுதீவு ஆகிய பங்குகளின் இளைஞர்கள் விழிப்புணர்வுப் பேரணியை முன்னெடுத்தனர்.

ஒரு பிரிவினர் மண்கும்பான் சந்தியிலிருந்தும், இன்னொரு பிரிவினர் வங்களாவடி சந்தியிலிருந்தும் பேரணியை ஆரம்பித்து சாட்டி திருத்தலத்தை நோக்கி "போதையை ஒழிப்போம் இலட்சியத்தை நோக்கி நடப்போம்" என்னும் கருப்பொருளில் பதாகைகளை ஏந்தியவாறு பவனியாக வந்து போதைப் பொருளுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

தீவக மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி நரேஸ் அடிகளார் வழிநடத்தலில் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார், தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி டேவிட் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொலிஸார், நலன் விரும்பிகள், இளையோர் மற்றும் பொதுமக்கள் எனப் பல தரப்பட்டோர் விழிப்புணர்வுப் பேரணியில் கலந்துகொண்டனர். (எ-14,27)

**வகுப்புக்கள் ஆரம்பம்**

4+ மற்றும் தரம் 01,02,03 இற்கான மாலைநேர வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்பிற்கு: 075 529 6281

**பணிப்பெண் தேவை**

திருநெல்வேலி பகுதியில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு: 076 31 76 146

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியில் ஹோட்டல் ஒன்றிற்கு றைஸ், கொத்து, உணவு பரிமாறுபவர் ஆகியவற்றிற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 076 31 76 146

**செவ்வாய் 2:1 இலவசம்**

**அப்பம், மதிய சைவ உணவு**

யாழ். பாடி விடுதி / உணவகம்

51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

+9421 222 6868, +9477 734 0026

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில் 100 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம்

077 8147 389

077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 33 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 185 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம்

077 98 65 457

077 81 47 389

(CS 22194) (1/6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.